நியாயவிலையில் அரிசி வழங்கவேண்டுமென்ற கோரிக்கை விடுத்தார்கள். எனவே, நியாயவிலையில் எங்கெங்கே அரிசி கொடுக்கிறோம் என்று சொன்னேன்.

இன்னும் சில இடங்களில் தேவை என்று கருதினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், மாவட்ட ஆட்சித்தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், கூடுதலாக நியாயவிலைக் கடைகளைத் திறந்து அரிசி வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. பாலையா : நான் குறிப்பிடுவது எல்லாம் பருவ மழை பெய்யாததன் காரணமாக பாதிக்கப்பட்ட, நான் குறிப்பிட்ட அந்த கிராமங்களில் தற்காலிகமாக நியாயவிலைக் கடைகள் திறக்கச் செய்ய வேண்டும். அதற்கு முடிவான பதிலை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவன ஈர்ப்புத் தீர்மானம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் அவர் குறிப்பிட்ட எல்லாப் பகுதிகளிலும் நியாயவிலைக் கடை திறக்கப்படும்.

(ஆ) சிங்கம்புனரியில் என்ஃபீல்டு இந்தியா தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், சிங்கம்புனரியில் என்ஃபீல்டு இந்தியா தொழிலாளர்கள் கடந்த 2—3—1974-ம் நாள் முதல் தங்களது ஆறு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம் செய்து வருவது பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1974 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இராமநாதபுரம், சிங்கம்புனரியில் என்ஃபீல்டு இந்தியா தொழிலாளர்கள் கடந்த மாதம் நடத்திய வேலை நிறுத்தம் பற்றி. துர் நடத்தை காரணமாக, இரண்டு வேலை பழகுபவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து, சிங்கம்புனரி என்ஃபீல்டு இந்தியா (வரையறைக்குட்பட்டது) தொழிற்சாலையில் 300 தொழிலாளர்கள் 2—3—1974 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். மாண்புமிகு தொழில் அமைச்சர் முன்னிலையில் 12—3—1974 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையின் விளைவாக தொழிலாளர்கள் 14—3—1974-ல் வேலைக்குத் திரும்பினர். 85 அலுவலக ஊழியர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளவில்லை. இப்போது நிலைமை அமைதிகரமாக இருக்கின்றது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இந்த வேலைநிறுத்தமானது நடந்து கொண்டிருந்த நேரத்திலேயே நான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்தேன். அதில் உடனடியாக அரசாங்கம் தலையிட்டு இருந்தால், லேபர் இலாகா அவர்களை அழைத்து என்ன குறைகள் என்று கேட்டு இருந்தால் அதை உடனடியாகத் தடுத்து இருக்கலாம். அது ஏன் காலதாமதம் ஆனது? உடனடியாக ஏன் தடுக்க முடியவில்லை என்பதை நான் அறியலாமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, 2-ம் தேதி வேலை நிறுத்தம் ஏற்பட்டது. 14-ம் தேதி வேலைநிறுத்தத்தை முடித்து இருக்கிறார்கள். இதைவிட வேகமாக வேலை நிறுத்தம் முடிப்பது என்பது இயலாது என்பதை கனம் உறுப்பினர் அவர்களும் அறிவார்கள் என்று நினைக்கிறேன்.

Dr. H. V. HANDE : My point was they brought to the attention of the Government much earlier, even before the strike took place. They had made their demands 6 அம்ச கோரிக்கை முதலில் சொன்னார்கள். அப்போதே கவனித்திருக்கலாம்.
My point is that we need not have waited till the strike and the strike could have been averted, if the Minister had been a little smarter.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இதைவிட சுறுசுறுப்பாக எனக்கு இருக்க முடியவில்லை.